நூல்

அந்தரங்க தீக்ஷை

ஆசிரியர்:- தி. வா. இராஜரத்தினம்
- பிள்ளை

ஆக்யோன் குறிப்பு.

அறிவுடையீர்;

எனக்கு அறிவுதோன்றிய காலமுதல் சித்தர் நூல்கள் பல ஆராட்சிசெய்து முப்புவின் ரகசியத்தை கண்டறியுமாறு பிரயத்தனப்பட்டதில் இதுபரியந்தம் அச்சுப்பதிப்பிற்கு வராமல் பரமரகசியமாய் வைத்திருந்த அந்தரங்க தீக்ஷை என்னும் பெருநூலில் முப்பு முடிக்கும் பாகத்திற்காக கூறப்பட்ட சூத்திரங்களை பார்வையிட்ட அளவில் ஞானவெட்டியான், நவரத்தின சிந்தாமணி, பஞ்சரத்தினம் காயகற்பம் 300, முதலிய நூல்களில் பரிபாஷையாக மறைத்துள்ள அநேக விஷயங்களை எல்லாம் இந்நூலில் பயிரங்கமாகவும் பரிபாஷைகளில்லாமல் தெளிவாக யாவரும் உணரும்பொருட்டு வரையப்பட்டிருக்கின்றன. சிலர் இரசவாதத்தொழிலும் அதற்குதவியாயுள்ள முப்புமார்க்கத்தையும் கற்க தங்களுக்குச் சரியான ஆசானும் நூலும் கிடைக்கப்பெறாததினால் வீணே இத்துறையில் உழைத்து பலனடையாமல் இவைகளெல்லாம் பிசகென்று இழிவுகூறுகின்றார்கள். மகுத்துவம் தங்கிய சித்தர்கள் முப்புவின் ரகசியத்தை பாமர ஜனங்களுக்கு மறைத்தும் பக்குவர்க்கு அறிவடைந்தகாலத்தில் அதின் ரகசியத்தை அறியும்பொருட்டும் கூறியிருக்கின்றார்கள். வினையாளிக்கு

விழித்தோன்றும் என்றவாறு பேராசையை முன்னிட்டு உண்டாகும் அவசரமும் கைபாகம், செய்பாகம், விறட்டி யின் கணக்கு முதலியவை சரிவரதெரிந்து ஆலோசனை யுடன் செய்ய முயலாமையே. ஆகையால் இந்நூலில் மேற் சொல்லிய சந்தேகங்களெல்லாம் முற்றும் நீக்கி தெளிவாய் சொல்லப்பட்டிருப்பினும் இதைக் கண்ணுரும் நண்பர்கள் எதாகினும் குற்றம் குறைகள் இருப்பினும் அதை மன் னித்து அடியேனை புனிதமாக்க கோறுகின்றனன்

இப்படிக்கு

தி. வா. ராஜரத்தினம் பிள்ளை
பென்ஷன் போஸ்ட்டு மாஸ்டர்,
179 ஐரோட், செங்கல்பட்டு போஸ்ட்டு.

ஸ்ரீம்.

அகஸ்தியர்
அந்தரங்க தீக்ஷை.

M.A

கடவுள் வணக்கம்.

சத்தி சிவம் ஒன்ருய் தழைத்த பெருவெளியில்
வித்தாய் முளைத்தெழுந்த—வேலவரை
நித்தம்நித்தம் சடாக்ஷர மந்திரத்தால் சார்ந்து
அடிபணிவார் தமக்குக் கடாக்ஷிப்பான் காப்பு.

வாமபூஜை—அகாரதீக்ஷை.

பண்ணடா சிவபூஜை சத்தி பூஜை
பக்தியுடன் சித்தமதாய் வாமபூஜை
நண்ணடா பூரணமாம் பூஜையோடு
நாமிந்த ஜோதியடா யோகபூஜை
கண்ணடா தவருமல் பூஜை செய்ய
கருமானம் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு.

விண்ணடா நிறைந்தமலர் கண்ணே சூக்ஷம்
வேதாந்த சூக்ஷமதை விரும்பிக்கேளே. (1)

விரும்பிமனம் கொண்டு சிவபூஜை கேளு
வேதாந்த சின்மயத்தை மெய்யிற் கொண்டு
வரும்பிறவிதனை யகற்றும் சிவமே தென்றால்
வகையுடனே சொல்லுகிறேன் அகாரமாச்சு
அருந்தவமாய் நின்றதொரு அகாரபூஜை
ஆரறியப் போறூர்கள் ஆதிவிந்து
திருந்தியதோர் விந்துவென்றால் கெங்கைகெங்கை
திருவான கெங்கையடா அமுரிதானே. (2)

தானான அமுரியடா அகாரமாச்சு
சங்கையுடன் அகாரமதைத் தானே
வானான கேசரியை தியானம் பண்ணி
வரிசையுடன் இராப்பகலும் தானேமாற
ஊனான தேகமதில் நின்றபீடை
உத்தமனே அப்போதே விலகிப் போச்சு
வீனான பீடையது விலகிப்போனால்
வேதாந்த தேகமது சித்தியாச்சு. (3)

ஆச்சப்பா தேகமது சித்தியானால்
ஆதிசதா சிவஜோதி அங்கே காணும்

மூச்சப்பா தன்னிலே விட்டகலாதப்பா
முத்தியுள்ள சித்தமது கெட்டியாச்சு
பேச்சப்பா தானடங்கி மௌனமாச்சு
பேரண்டம் சுத்திவர கெவுனமாச்சு
நீச்சப்பா தானறிந்து கெவுனத்தேகி
நிஜமான அகாரமதைப் பூஜைபண்ணே. (4)

உகாரதீக்ஷை.

பண்ணப்பா சிவமான அகாரதீக்ஷை
பக்திகொண்டு பூரணமாய் செய்தபின்பு
நண்ணப்பா உகாரமென்ற சத்திதீக்ஷை
நன்மையுடன் சொல்லுகிறேன் உண்மைக்கேளு
விண்ணப்பா கண்ணுன மூலத்தீயில்
விளங்கிநின்ற உகாரமென்றும் சத்தியென்றும்
உண்ணப்பா நிறைந்தசிவ சத்தியோடு
முத்தியுள்ள அகாரமென்ற விந்துசேரே. (5)

சேரப்பா அகாரமுடன் உகாரங் கூட்டி
செம்மையுடன் உருவேற்றி நின்முயானல்
நேரப்பா நின்ற திருவாசியாலே
நிலையான புருவமதில் தீபங்காணும்
பாரப்பா தீபமதைக் கமலக் கண்ணுல்
கண்ணிறைந்து வாசியினுல் ஊன்றிப்பாரு

சாரப்பா வாசியினுல் ஊன்றிப்பார்க்க
சதா போதமான சிவயோகி யாமே. (6)

மகாரதீக்ஷை.

ஆமப்பா சிவயோகம் செய்வதற்கு
அப்பனே அகாரமுடன் உகாரஞ் சொன்னேன்
தாமப்பா காரமென்ற வாலை தன்னை
தாரணியில் யாரறிவார் சங்கை மார்க்கம்
காமப்பால் கொண்ட சிவகெங்கையான
கன்னி மனோன்மணி யீன்ற நாதமென்றும்
நாமப்பா சொல்லுகிறோம் செந்தே னென்றும்
நாதாந்த நாதமென்ற மகார மாமே. (7)

ஆமென்ற மகாரமுடன் மைந்தாகேளு
அருள் பெருக அகாரமுடன் உகாரங்கூட்டி
ஓமென்ற பிரணவத்தின் மகிமையாலே
உறுதியுடன் மூன்றெழுத்துஞ் செபித்தாயாகில்
தாமென்ற தன்னிலையே பிர்மமாகி
தானாகித் தானவனுய் தான் தானுவாய்
ஓமென்ற நாதாந்த முத்தியாலே
நடுவெழுந்த மூன்றெழுத்துஞ் சித்திதானே. (8)

சித்து மயமாவதற்கு மைந்தா கேளு
தீர்க்கமுடன் அகாரமதை ஆண்டு சேவி
முத்திபெற ஜெயித்த பின்பு உகாரந்தன்னை
மூர்க்கமுடன் ஆண்டொன்று ஜெபித்து திரு
பத்தியுடன் ஜெபித்த பின்பு மகாரந்தன்னை
பாலகனே ஆண்டொன்று பதிவாய் சேவி
புத்தியுடன் இது மூன்றுஞ் செபித்து தீர்ந்தால்
பூரணமும் காரணமும் பொருந்தும் பாரே. (9)

பாரப்பா பூரணமே அண்டமாச்சு
பதிவான காரணமே பிண்டமாச்சு
நேரப்பா அண்டமொடு பிண்டம் ரெண்டும்
நேரறிந்து கொண்டவனே சித்தன் சித்தன்
சாரப்பா அந்தரங்க தீக்ஷை நூலே
தன்மையுடன் பூரணமாய் சார்ந்து கொண்டால்
மேரப்பா அண்டபிண்டம் தானாய் நின்று
மேதினியில் பூரணமாய் வாசியாமே. (10)

புலத்தியனே கேளப்பாநீ கற்பப் போக்கை
பேர்பிரித்து நாதவாழுறைப்பேன் கேளு
சலமதியாம் பேரின்பத்தேனு வென்றும்
சாற்றினர் மதுரரஸ வஸ்து பானமென்றும்

உலகமதில் அம்பிகையாள் அமுர்த மென்றும்
உத்தமனே வாருதியாம் இன்ப மென்றும்
நலமூலக் கருவென்றும் நாத மென்றும்
நாட்டினர் சுக்கிலமா மென்று தானே. (11)

என்றென்றும் விந்து சுரோணிதந் தானென்றும்
இன்பம்வளர் கோசபீஜந் தானென்றும்
முன்னமே சூதமென்றும் கெந்தியென்றும்
முறைமுறையாய் வெகுபேர்கள் மொழிந்திட்டார்கள்
வின்னங்களில்லை முன்னே சொன்ன கெங்கை
விதத்தாலே ரசவாதம் வருகும்பாரு
சொன்னமொழி எவ்வளவும் தப்போ இல்லை
சூக்ஷமடா சரக்கெல்லாம் கட்டுந் தானே. (12)

கட்டுகின்ற சேதிபின்னல் சொல்லி வைத்தேன்
கற்பமது நாற்பதுக்குள் உண்டால் நன்று
நட்பதனல் நரைத்து வெகுநாட்கள் சென்றால்
நாள் செல்லும் அதனலே ஒன்றுமில்லை
கொட்டமுடன் அமுரிகற்பம் சொற்ப மென்றும்
கொண்டழிந்தோர் கோடான கோடி பேர்கள்
விட்டகுறை வந்தாலும் யோனியில்
விசேஷமாய் அடிபட்டோர்க் கென்ன வாய்க்கும். (13)

என்னமாய் வாய்க்குமப்பா சொரூப சித்தி
எக்காலம் மாதர்மையல் கொண்டிருந்தால்
நன்னவே குருவினுடைய உபதேசம் பெற்று
நடுவான ஏகாக்ஷரத்தை நயந்து போற்றி
தன்னுக்குள் விந்துநிலை தன்னிலே தான்
சார்ந்து மனதொன்றாகித் தனதாய் மைந்தா
முன்னிலையைத் தான்பிடித்து நடுவணையில் நின்று
முத்தியுள்ள அகாரமதை தினந்தான் போற்றே. (14)

போற்றவென்றால் அகாரமது என்ன சொல்வேன்
பூரணமாங் கண்மணியைப் புகலக்கேளு
பார்த்திபனே அகாரமடா விந்துவிந்து
பதிவான விந்துவடா சாரமாகும்
சாற்றியதோர் சாரமது அப்பு அப்பு
சங்கையில்லா அப்பதுவுந் தண்ணீர் தண்ணீர்
தேற்றியதோர் தண்ணீர் வெண்சாரை யாமே
தெவிட்டாத சாரையடா அமுரிதானே. (15)

அமுரிக்கு பேர்மாத்திரம் சொல்லக் கேளு
அப்பனே சந்திர புஸ்கரணி யென்றும்
கங்கைமதிநீர் ஊசிநீர் ரோமநீ ரென்றும்
கண்மணியே சொல்வார்கள் அநந்தம் நாமம்

சமுதாவில் முன்னமே சொல்லி வைத்தேன்
சாற்றுகிறேன் அமுரி ஏகாக்ஷரத்தை
அமுர்தமாம் ஓராண்டு சரந்தான் மாற
அப்பனே வைராக்கிய மாகத்தேரே. (16)

தேரவே மாறிமாறி அமுரிக் கொள்ளு
தினந்தோறும் அந்திசந்தி விடாமற் தானும்
மாறினல் மிதத்தோடும் சாரை தன்னை
மாறப்பா அடிக்கடிக்கு மாறு மாறு
மாறவே பசிவந்தால் ஒருபோ தன்னம்
உட்கொள்ளு அகமிலா வண்ணமாக
மாறுவது அமுரிசுத்த ஜலமா மப்பா
பார்புகழ் அமுர்த மென்றே பேருமாச்சு. (17)

ஆச்சப்பா காயகற்பம் உபவாசந் தான்
அப்பனே தேககாந்தி பிரகாசிக்கும்
நீச்சப்பா தினந்தோறும் மறவாமற்றான்
நினைவாகச் சரம்மாறி யுண்டாலப்பா
பேச்சப்பா அடங்கித் தேகம் சிவந்து காணும்
பேய்மனமாம் புத்திசித்தம் ஆண்மை எல்லாம்
மூச்சுப்போல் அடங்கிவெந்து நீறாய்ப் போகும்
உடன் விந்தும் பாழாகும் மாய்கை போகுமே. (18)

போகுமே வாலைரச முண்டால் மைந்தா
பூலோக மெல்லாந்தான் சோதித்தாலும்
போகத்தோர்க் கிடைப்பதல்ல பொருளறிந்தோர்
புலத்தியனே கோடிக்கு ஒருவர் தானும்
அகமுடன் கிடைப்பாரப்பா அதுவுங் கஷ்டம்
அப்பனே ஓராண்டு வரைக்குந் தானும்
பாகமுடன் இப்பொருளை பத்திரமாக
பார்த்துமே யுட்கொள்ள வேண்டுமப்பா. (19)

அப்பாகேள் இந்த கற்பம் அற்பமல்ல
யாரறிவார் அவனிதனில் யாருங்காணார்
ஒப்பாக வாதம் வரும் முப்பதுக்குள்
உட்கொள்ள வேண்டுமப்பா நாற்பதின்மேல்
தப்பிதங்கள் வாராமல் கனல் ஏறாமல்
தானருந்த வேண்டுமப்பா ஐம்பதுக்குள்
கொப்பனவே கொண்டாக்கால் போஜனமே
கொண்டிடுவாய் உச்சி ஒருவேளை தானே. (20)

ஓராண்டு அமுரியுண்ண இடைவிடாமல்
உத்தமனே கனல்வேகம் அதிகமாகும்
மீராத வன்னியினால் நெருப் புண்டாகும்
மைந்தனே தேகமது வெந்து போகும்

வீரியே உடலெல்லாம் வெடித்து போகும்
வேகமது கனவேக மிகவே காணும்
மீராது மனம் விம்பி யதிகமாகும்
வேதனைகள் ரொம்ப ரொம்ப வருகுந்தானே. (21

வந்தாலும் எந்தெந்த வினைக ளெல்லாம்
வருகுமப்பா ஓராண்டுக் குள்ளே தானே
நொந்தாலும் பராபரத்தை நொந்துக் கொள்ளு
நொடிக்குள்ளே ஆண்டதிலே வாந்தி யாகும்
மைந்தனே முதலாண்டில் பத்திய பாகம்
கேளப்பா பச்சரிசி பசும் பயருமாவில்
சிந்தையுடன் வெண்பசுவின் பாலும் விட்டு
சீராக சமைத்து அன்னம் ஒருபொழுது தானே. (22)

ஒருபொழுது அன்னமது சமைத்து தானும்
உறுதியுடன் பகல்தனிலே உச்சிவேளை
ஒருபொழுது சாப்பிடவே வேண்டுமப்பா
உத்தமனே அதுவும் அரைவயறு சாதம்
ஒருபொழுதே சாப்பிட்டு முதல் ஆண்டில்தான்
உபாயமதாய் தேரியே வருகும் போது
ஒருபொழுதாம் இராத்திரியில் ஆவின்பால் கொள்
உக்கிரமதை தணிக்குமப்பா இந்த வண்ணம். (23)

இவ்வண்ணம் மறவாமல் ஓராண்டாகில்
இன்பமுடன் இரண்டாண்டில் சொல்லக் கேளு
அவ்விதமாய் அதிகாலை அமுரியுண்டு
மாலைதனில் சொல்லுகிறேன் மகிழ்ந்து கேளு
அவ்விதமாய் ரவி இருபத்தஞ்சு நாழி
ஆனபின்பு சொல்லுகிறேன் அன்பாய்க் கேளு
இவ்விதமாய் காலைதனில் வந்த உகாரம்
எடுத்துமே பத்திரமாய் வைக்க வேண்டும். (24)

வைத்ததொரு உகாரத்தில் அமுரிவிட்டு
வகையுடனே உட்கொள்ள வேண்டு மப்பா
சித்தமது ஒருமித்து கார சாரம்
சிறப்புடனே உண்டாலே தீக்ஷை யென்றும்
பத்தியுடன் காரமதை என்ன சொல்வேன்
பார்மகனே மருவினுட வாசம் வீசும்
சித்தியதாம் தேகமது அமுரி காரம்
சிவனுடைய நஞ்சு மேலாம் எண்ணே. (25)

சிவஞ்சத்தி மேரு சிங்காதனத்தின் மேலே
சிறப்புடனே வீற்றிருக்கத் தன்னுக் குள்ளே
தவமதுவால் சாரமது செய்ததாலே
தாரணிகள் தான்புகழும் சாரத்தாலே

நவவீடால் வந்ததொரு காரத்தாலே
    நலமுள்ள சரக்கெல்லாம் நீறும் நீறும்
உபயோக உந்தியின்கீழ் கனிதா னென்று
    உப்பதுவாம் உவரதுவாம் புளியு மதுவே. (26)

புளியுமது நவநீதமிது தான் கேளு
    புகழான கற்பமுண்டோர்க் கெய்தும் வாதம்
அளியாத கோரக்கர் மூலிதானும்
    அப்பனே கெஞ்சாவென் றுண்டு செத்தார்
புளியதுவே கோரக்கர் மூலியாகும்
    புகழாக உண்டோர்கள் சித்தரானார்
வெளியாக லிங்கத்தின் கீழே தானும்
    எப்பொழுதும் சவுக்காரம் பொங்கும் பாரே. (27)

பாரப்பா சாரமென்ற அமுர்தந் தன்னில்
    பக்குவமாய் காரமது அதினையே யூட்டி
நேரப்பா இரண்டாண்டில் கொள்ளச் சொன்னேன்
    நேர்மையாய் கொண்டாலே உவராங் காரம்
காரப்பா இருபத்தைந்து கடிகை மேலே
    காரமதை கொள்ளப்பா மத்த வேளை
சாரப்பா சாரமதைக் கொள்வாய் நீயும்
    சார்புடனே இவ்வண்ணம் கொள்ளும் போது. (28)

கொண்டுவரும் போதிலப்பா தேகந் தானும்
கூறுகிறேன் பானுபோல் ஒளியே வீசும்
அண்டருட தயவினாலே இரண்டாண்டில் தான்
அப்பனே முதற்பிறையாள் தன் சாரந்தானும்
நன்றாகப் பசுமைபோல வருகு மப்பா
நான்சொன்னேன் இரண்டில் மஞ்சள் நிறமாகும் பாரு
விண்டாலோ மூன்றில் பொன்வண்டு ரூபம்
விளம்புகிறேன் தங்கநிறம் நாலிலாமே. (29)

நிறஞ்சொன்னேன் திங்கள்ஐந்தில் காரம் வாங்கி
நின்னமுர்தம் விட்டதிலே பிசைந்து நன்றாய்
திறமுடனே கொடும் ரவியில் இருசாமந்தான்
தீர்க்கமுடன் ரவிபடிய வைத்தா யானால்
வாமுடனே உவர்படிந்த பிசைந்த மண்ணை
அப்பனே உண்டுவர திங்கள் ஐந்தில்
சிரமமது இல்லையப்பா ஆறுந்திங்கள்
சிறப்புடனே ஏழெட்டு ஒன்பது பத்துமட்டும். (30)

பத்துத்திங்கள் மட்டு மிந்தப்படி செய்தால்
பாலகனே பூர்க்குமப்பா இதுதான் முப்பு
புத்தியில்லா பாவிகள்தான் பூநீர் வாங்கி
பூமிதண்ணீரால் கலக்கி வெளியில் வைத்து

சித்தமது தான்கலங்கி முப்பு வென்றும்
சிறந்த சரக்கத்தனையும் சுட்டுப் பார்த்து
பித்தமது தான்பிடித்து நோயால் மாய்ந்து
பிணமாகிச் சுடுகாடுப் போனார் தானே. (31)

கவனிப்பு :—அமுரியை கற்பமாக தினந்தோறும் அந்தி சந்தி விடாமல் ஓராண்டு உட்கொள்ள அமுரி சுத்தஜலமாகமாறி அமுர்தமென்ற பேருமாச்சு, இரண்டாமாண்டில் அதிகாலையில் அமுரியுண்டு மாலை இருபத்தஞ்சு நாழிகையான பின்பு காலை வந்த அமுரியில் ஏற்பட்ட உகாரமென்னும் உப்பை எடுத்து நாலுக் கொன்று அமுரிவிட்டு கலக்கி உட்கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதால் உப்பின் நவநீதமாகிய உவர், காரத்தை அடைகின்றது இவ்விதமாய் இரண்டாம் தீக்ஷையில் அப்பையும் உப்பையும் கற்பமாக சாதனை செய்யுங்கால், அமுரி முதல் மாதத்தில் பசுமை போன்ற வெண்நிறமும், இரண்டில் மஞ்சளாகவும், மூன்றில் பொன்வண்டு நிறமாகவும், நாலில் தங்க நிறமாகவுமிறங்கும். ஐந்தாமாத முதற்கொண்டு காரமென்ற உப்பை வாங்கி அமுர்தமென்ற அமுரியைவிட்டு பிசைந்து சூரியவெப்பத்தில் இரண்டு ஜாமம் வைக்க உப்பின் நவநீதமாகிய உவருப்புபடியும். அதை பிசைந்து ஆறு ஏழு எட்டு ஒன்பது பத்துமாதமட்டும் மாலை மாத்திரம் உண்டு வந்து மூன்றும் ஆண்டில் அமுரி வாங்கி முப்பு ரகசிய பாகத்தில் சொல்லியபடி செய்ய, பூர்க்கும் உப்புதான் முப்புவென்றும் யோஜனையில்லாமல் பூநீரைவாரி தண்ணீரில் கலக்கி முப்பு வென்று சிறந்த சரக்கத்தனையும் சுட்டுப்பார்த்து வெறிபிடித்து நோயால் மாய்ந்து பிணமாகி சுடுகாடு போகின்றார்கள்.

தானென்ற இரண்டாண்டில் நோய்கள் செஞ்சம்
　　தான்வந்தால் வருகும் பெரிதல்ல கேளு
தானென்ற காரத்தை ஊட்ட ஊட்ட
　　தான்தனிந்து போகுமடா இதற்கு வேறே
கோனென்ற ஜெகந்தனிலே மருந்துமில்லை
　　கூறினேன் இரண்டாண்டில் பூரணமே யானல்
வானென்ற ஐங்கோல மாச்சு தப்பா
　　வரைகிறேன் கெற்பம்போல் கற்பமாச்சே. (32)

கற்பமினி வாசி தாரணையைச் சொல்வேன்
　　காலமடா இரண்டாண்டில் போனல் கேளு
உற்பனமாய் காலனில்லை மாண்டா னப்பா
　　உகாந்தவரை பூமியிலே இருக்கலாகும்
அற்புதமாய் சொல்லுகிறேன் உலகி ரேழும்
　　அஷ்டதீவு தீவாந்திர தேவ ரெல்லாம்
சொற்பதமாய் தான்மகிழ ஏகாந்தத்தில்
　　சுகமுடனே பரம்நாடி இருக்கலாமே. (33)

இருக்கலாம் யாவர்களும் ஏவல் செய்ய
　　இவ்வுலகிற்கும் அவ்வுலகிற்கும் என்றும் போற்ற
பெருக்கலாம் கைலைவாழ் ஈசன் பாதம்
　　பெற்றிடலாம் சித்தருடன் பேசலாகும்

நெருக்கமுறும் ஆயிரத்தண்டந் தன்னை
நிமிஷத்தில் சுத்திவந்து நிலைக்கலாகும்
முருக்கலாம் இவ்விரண்டு தீக்ஷைபோதும்
மூன்றுமே முடிந்தாலே ஈசனெனப்பாம். (34)

ஈசனிவன் பரனிவனே உலகுக் கெல்லாம்
இவ்வண்ணம் மாலைப்புளி காலை அமுர்தம்
பாசமுடன் இரண்டாண்டில் கொள்ளும் போது
பாரப்பா ஒருகால போஜனமே கொண்டு
ஆசையுடன் மதிதனிலே ஆவின்பால் கொள்
அப்பனே சத்தியுடைய தீக்ஷை யென்றும்
பூசையென முடிந்தாலே இவர்க்கு வந்த
புகழ் உரைப்பேன் புலத்தியனே நன்றாய்கேள். (35)

நன்றாய்கேள் முக்காலங் கியான முண்டாம்
நால்வேத சாஸ்திரத்தின் கருத்துந் தோன்றும்
என்நாளும் பன்னிரண்டு ஸ்தலமுங் காணும்
ஈசனுட சித்திபெற்று எனைப்போல் வாழ்வான்
அன்றல்லோ ஐங்காயம் உலகி லெய்தும்
அப்பவல்லோ சிவரூபம் இவன் தானாகும்
இவ்விதமாய் சத்தியொரு தீக்ஷை பெற்றால்
இவன்கைப்பு முறிந்து தங்கமாகுந் தானே. (36)

பகருவேன் இனிவேதை மூன்று மாண்டில்
அகாரமென்ற தீக்ஷை முதற்கொண்டு
ஐயிரண்டு திங்கள்வரை அமுரியுண்டால்
மோகமது தான்ஒழிந்து மாய்கை விட்டு
முன்னிருந்த வினை ஒழிந்து தேகந் தானும்
பாரமுடன் சத்தியதாம் அக்காலத்தில்
பாரப்பா இருவினையாங் கர்மபாவம்
ஏகமாய் வந்தாலே சொல்லக் கேளு. (37)

என்னாளும் விடாமலே அமுரி கணையே
கணைதொடுத்துச் சுடசுடவே வினைக ளெல்லாம்
கண்காணு தோடுமடா கற்பத்தாலே
வினையில்லை அமுரியுட கற்பந்தானும்
விளம்புகிறேன் பிர்மாதி கற்பமாகும்
முனையான சிவதீக்ஷை ஒன்றுந்தான்
முடிந்தாலோ காயசித்தி யோகசித்தி வாதமது சித்தியாகும்
சித்தியது செய்கும் போது. (38)

செய்துமே வருகின்ற போது தானும்
சிறப்புடன் பத்தியந்தான் சொல்லக்கேளு
மெய்யான ஆவின்பாலன்னங் கொள்ள வேணும்
மேன்மையாய் கறிவகைகள் மூலஞ் சேர்ந்தால்

செய்கின்ற தீக்ஷைக்கு வேகமில்லை
செங்கதிர்போல் தேகமாம் வெண்மை யில்லை
மெய்யாக புளிதனிலே பழுதுண்டாகி
மேன்மையாங் காரமெல்லாம் புழுக்கள் தானே. (39)

உறுதியாய் கற்பமுண்ணும் முறை பாகங்கள்
உத்தமனே சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
அருந்தவத்தால் ஆனதொரு அமுர்தந் தன்னில்
அப்பனே சொல்லுகிறேன் நாதங் கூட்டி
பருவமுடன் மூன்றுண்டில் காலைமாலை
பருகியப்பா ராஜாங்க யோகம் செய்வாய்
திரமான அன்னமுடன் ஆவின்பால் கொள்
தேகத்தில் கனல்வேகம் இல்லா வண்ணம். (40)

இல்லா வண்ணமாய் முன்னே தானும்
இன்பமுடன் மூனேமுக்கால் கற்பஞ் சாதி
நல்விதமாய் பின் அன்னம் உண்டு அப்பா
நலமுடனே வாசி அப்பியாசம் செய்வாய்
சொல்லுகிறேன் காலைதனில் அப்பா கேளு
சுகமுடனே மதிதனில் காரங் கூட்டி
பொல்லாங்கைத் தான்தராது இதுகள் தானும்
புகழ்முந்தி ஜென்மத்தில் விட்ட குறையால். (41)

போனாலும் கற்பங்கள் கொள்ளும் போது
புலத்தியனே கனநடையும் மழையுங் காற்றும்
ஊனான மனிதர் சஞ்சார மாய்கை
உத்தமனே சோம்பலும் தூக்கத்தோடு
மானாகேள் பிதற்றலும் கோபத்தோடு
மாற்றபினி கஞ்சா மதுவினோடு
கோனான கறிவகை சுவையினோடு
கூறிவந்த இதுகள் எல்லாம் தள்ளே. (42)

தள்ளிவிட்ட கற்பத்திற்கு உறுதி சொல்வேன்
தானினிமேல் பச்சரிசி பயரோடப்பா
விள்ளுகிறேன் பால்விட்டு சமைத்து தானும்
விருப்பமுடன் கருவேம்பு அமுரியுப்பும்
சள்ளையில்லா மிளகுடனே மூன்றுஞ் சேர்த்து
சாற்றுகிறேன் தூளாக்கி அமுதில் தூவி
எள்ளளவும் பாராமல் ஒருபொழுது தானும்
ஈஸ்வரியாள் திக்ஷையாலே மூன்று மாண்டில்
மூன்றான ஆண்டினிலே உண்டுவர நீ
உத்தமனே இனி அண்டச் சுண்ணம் சொல்வேன். (43)

ஆண்டிரண்டில் அந்திசந்தி தீக்ஷை செய்த
அப்பனே மீந்ததோர் காரமெல்லாம்

மூண்டதொரு சமாதிதனில் அடக்கம் செய்த
முக்கியமாய் மேருவே அண்டமாச்சு
பூண்டதொரு முப்பது வயதண்டம் தானெடுத்து
நான் சொல்வேன் அந்தஅண்டச் சுன்னம்
விண்டதொரு வேதாந்த முடிவில் சொன்னதோர்
நாதத்தில் மதி சேர்த்து கரைத்திடாயே. (44)

அண்டச் சுண்ணம்.

கரைத்துமே சட்டியிலே விட்டு மைந்தா
கருணையுடன் மேல்மூடி சீலைசெய்து
திறமுடனே மூன்றுநாள் வைத்து வைக்க
தீர்க்கமுடன் நாலாம்நாள் தெளிந்த நீரை
அறைகிறேன் குப்பிதனி லடைத்துக் கொள்ளு
அப்பனே முன்சொன்ன அண்டம் வாங்கி
முறைத்துமே அயக்காம்பால் மாவாயாக்கி
முற்றுமே வடித்தபின்பு சொல்லக் கேளு. (45)

சொல்லக்கேளு வடித்த அண்ட சூரணத்தை
சுகம்பெறவே சீலையிலே கிழியாய் கட்டி
நல்லக்கேள் ஒருபடியாய் அமுர்தந் தானும்
நலமுடனே பாண்டத்தில் மைந்தா
நல்லாகக் கிழியதனை அதிலே பாச்சு
சீலமுடனே மேல்மூடி ஜலந்தான் சுண்ட

சொல்லுவேன் எரித்தான பின்பு எடுத்து
துரிதமுடன் கல்வத்தில் போட்டிடாயே. (46)

போட்டபின்பு முன்குப்பியி லடைத்து வைத்த
புகழான பழம்புளிநீர் விட்டுத் தானும்
ஆட்டிடுவாய் இருஜாமம் வற்ற வற்ற
அப்பனே நீர்வார்த்து அறைத்துத் தானும்
நாட்டமுடன் மெழுகு பதமாகும் போது
நலமுடன் தான்வழித்து பில்லை தட்டி
வாட்டிடுவாய் கதிர்முகத்தில் காய்ந்த தானல்
சொல்லுகிறேன் ஓட்டில் வைத்து ஓடுமூடே. (47)

மூடியே சீலைமண் ணேழுஞ் செய்து
முழப் புடத்தில் போட்டிடுவாய் முக்கியமாக
சூடதற்கு ஆறினபின் னெடுத்துப் பாரு
அண்டமென்ற சுன்னத்தின் ஒளிவு தானும்
கோடிமதிக் கொக்குமப்பா புலத்தியா கேள்
குறிப்புடனே இதையெல்லோ சித்த ரெல்லாம்
பாடினர் நூல்களிலே அனந்த மார்க்கம்
பாரப்பா மறைத்ததெல்லாம் இதுதான் பாரே. (48)

கற்பம் உண்ணும் பாகம்.

பாரப்பா இச்சுன்னங் காரமெத்த
பகருகிறேன் சுக்கிலத்தின் சுரோணிதத்தால்

நேரப்பா வாச்சுது காண் சொல்லக்கேளு
 நேர்மையுடன் காரமதில் சாரம் விட்டு
தேருதற்கு பணவிடைதான் சுன்னம் விட்டு
 செய்பாகத்துடன் பிசைந்து லேக்கியம் போல்
பாரப்பா மூன்றுண்டு அதற்கப் பால்
 மகிமையுடன் அத்திங்கள் பத்துங்கொண்டால். (49)

உண்பதினல் உண்டாகும் பலன்.

கொண்டாலோ திரேகம் வஜ்ஜிர காயமாகும்
 குடிலமென்ற சட்டைகளும் கழன்று போகும்
நன்றான திரேகமது பானு போலாம்
 நான் சொன்னேன் வாசிதனை தூக்கிவிட்டு
சென்றாதி பிராணயம் உள்ளடங்க
 ஜெகத்தோர்க்கு கற்பத்தின் விதியைக் காட்டி
பண்டுபோல் ஆதாரம் காணுதற்கு
 பாரப்பா யோகங்கள் அறிவித்தேனே. (50)

கல்லுப்பு வெள்ளைக் கல்லுப்பு.

காணவே கல்லுப்பு வாறுதானும்
 கறுதியே யறியாமல் உலகிலுள்ளோர்
ஆணவங்கள் மிகப்பேசி இறந்துபோனர்
 அப்பனே கல்லுப்பைத்தேடினோர்கள்

வேணபேர் உண்டப்பா இறந்திட்டார்கள்
விளம்புகிறேன் வெள்ளைக்கல்லுப்பு தானும்
பூணப்பா வெகுவிதமாய் ஆய்ந்தாலுந் தான்
புத்தியுடன் உள்ளமதில் உண்டுபாரே. (51)

கல்லுப்பு உற்பவ உண்மை.

உண்டுபார் கல்லுப்பும் வெள்ளைக் கல்லுப்பும்
உத்தமனே இந்துப்பு இதுகளெல்லாம்
நன்றான தீக்ஷையது செய்துநின்ற
நலம்பெற்ற அமுர்தத்தை காய்ச்சினுக்கால்
உண்டான உப்புக்கு இன்னுமங்கள்
உறுதியுடன் கூறி இருக்க உலகந்தன்னில்
சண்டாளர் வெவ்வேறு உப்பெடுத்து
சாற்றுவார் கல்லுப்பு வென்றுதானே. (52)

பரிபாஷை.

தானென்ற வெள்ளைக் கல்லுப்பு வென்றும்
சாற்றுவார் இந்துப்பு வென்று தானும்
கோனென்ற உப்புக்கு முப்பு வென்றும்
கூறினர் எதினாலே யென்று கேட்டால்
பானென்ற மூன்றுந் திக்ஷைக்காகும்
பலதொழிலுக் குதவுவதால் முப்பு வென்றும்

தேனான சித்தர்கள் கூட்டங் கூடி
திருவான நாமங்கள் கொடுத்திட்டாரே. (53)

அப்பாகேள் வாதசித்தி பெற்ற தென்ன
அன்புடனே சொல்லுகிறேன் புலத்தியா கேள்
ஒப்பாக மதிரவியை பணிந்த தாலே
உறுதியுடன் தன்னுக்குள் உவர் அகற்றி
தப்பிதங்க ளில்லாமல் வாழ்ந்திருந்தால்
தன்மையுடன் காரமென்ற பூனீர் தானும்
உப்பாக காயத்தில் இருக்குமப்பா
உண்மையுள்ள சாரத்தைக் கொண்டு தானே. (54)

கொண்டுமே சவுக்காரங் கட்டாமற்றான்
குணம் பேயாய் உலகத்தில் பூனீர்தேடி
அண்டத்தில் அலைந்தலைந்து மாண்டாரப்பா
ஐயனே இதுவன்றோ பூனீர்காரம்
நன்றாகஇது வல்லோபுளியாம் பூனீர்
நன்கார வீரமதுவெடி உப்புந்தான்
கொண்டபொருள் அடிமுடியும் இதுதானப்பா
கூறுகிறேன் சுருதிமுடி பொருளைக் கேளே. (55)

பொருளப்பா இப்பொருளே சுருதி அந்தத்தில்
புகழுடனே சொல்லுகின்ற பொருளாமப்பா

அருந்தவத்தா லொருவருமே யறியா மற்றுன்
அன்பனே சூட்ஷமாய் முடிக்க வேணும்
திறமுடனே அகாரமென்ற தீக்ஷை யொன்று
தீர்க்கமுடன் சத்தியுட தீக்ஷை இரண்டும்
சிறப்புடனே முடிந்தபின்பு தாம்பூரத்தை
சிராக உருக்கியே சொல்லக் கேளு. (56)

சொல்லக்கேள் சுத்தகெங்கை தனிலே சாய்க்க
சுயம்பாகி ரவிபோல் ஒளியாஞ் செம்பு
நல்லாய்கேள் இப்பரிக்ஷை காண்ப தப்பா
நானிலத்தில் எளிதல்ல நான்தான் சொன்னேன்
உல்லாச தன்தேகம் ஊறலற்றால்
உறுதியாய் தாம்பிரமும் ஊறல்போ மென்று
எல்லைதனில் என்குருவும் எனக் குறைத்தார்
ஆதலால் புலத்தியனே உனக்காய் சொன்னேன். (57)

கொண்டான மூன்றான ஆண்டில் கேளு
கூறுகிறேன் புளிவிந்து சேர்ந்து தானும்
நன்றாக முடிக்கும் விதம்சொல்லக் கேளு
நற்செம்மை உருக்கியே மூன்று மாண்டில்
அண்டர்பிரான் தயவினல் வரும் பாணத்தில்
அப்பனே உருக்கிச் சாய்த்திட்டால் கேள்

உண்டைபோல் மணியாகு மதைதான் பின்னும்
உருக்கி நன்றாய் பார்க்க ஊறலற்றேபோம். (58)

முப்பு இலக்கணம்.

புகலுகிறேன் எனதுகுரு எனக்குத் தானும்
சாற்றினதால் புலத்தியனே விந்து நாதம்
சார்புடனே விளம்பினேன் உனக்கு அப்பா
தேற்றியதோர் பூநீரே நாதமாகும்
தெவிட்டாத வீரம்வெள்ளைக் கல்லுதானும்
வெள்ளைக் கல்உப்பதுவே விந்துவாகும்
விளம்புகிறேன் காரசார மிரண்டினால்
கொள்ளையாய் சொரூபசித்தி பெறவேயாகும். (59)

கூறுகிறேன் அமுரியே அப்புவாகும்
சள்ளையில்லா அப்பதுவே உப்பாகும்
சாற்றுகிறேன் உப்பதுவும் சிவமதாகும்
நல்புளியே நாதமாம் நாதஞ்சத்தி
நாட்டினேன் இதுகளையும் உள்ளுக்குள்ளே
நலம்பெறவே ஆதியுப்பு பெயர்கள்தான்
கூட்டினேன் காரசாரமென்று தானே
கூற்மையுடன் பரிபாஷையாக சொல்லக்கேள். (60)

ஆதி உப்புக்கு பரிபாஷை பெயர்கள்.

சொல்லக்கேள் அண்டக்கல் என்று தானும்
 சுகமான ஆனைக்கல் என்று தானும்
உல்லாச ஜல்லிவேர் என்று தானும்
 உத்தமனே கொல்லிவேர் என்று தானும்
விள்ளுவேன் விஷக்கல்லு என்று தானும்
 விருப்பமாய் குருக்கல்லு என்று தானும்
நல்லாக்கேள் கடல்நுரையா மென்று தானும்
 நாட்டுகிறேன் கடலுப்பு என்னுதானே. (61)

என்றுமே பூநீருப்பு என்றும்
 ஏகாந்த காந்தமல ரென்றுதான்
முன்னுளில் ஆதியந்தந் தனக்குத்தானும்
 உறுதியுடன் இவ்வளவு பேருமிட்டார்
இன்னமப்பா அநேகவித நாமமுண்டு
 இதுவெல்லாம் ஆதியந்த காரத்துக்கு
நன்முக பலபலபேர்கள் தானும்
 நாட்டி வைத்தார் கருவதனை நாட்டிப்பாரே. (62)

முப்பு உற்பத்தி செய்யும்விதம்.

எண்ணலாம் புலத்தியனே இன்னங் கேளு
 இதுதள்ளி இரண்டாண்டு முதல்தான் கொண்டு

அன்னவனின் செயல்படிக்கு கற்பஞ் சித்தி
அப்பனே முதல் தீக்ஷை முடிந்ததானல்
நன்ரும் பத்தரை மாத்துத் தங்கம்போலே
நவிலுகிறேன் தேகமா மூன்ரு மாண்டில்
பண்பான புளியிலிருந்து பனிதான் பட்டால்
பாரப்பா சொல்லுகிறேன் பூர்க்கு முப்பே. (63)

முப்பான முப்புவு மிதுதான் மைந்தா
உலகத்தோர் இதைவிட்டு பூநீர் வாங்கி
தப்பிரையாய் பனியில் வைத்தால் பூர்க்குமோ சொல்
தன்மையுடன் பதினோராண்டுக்குள் தானும்
அப்பான காரசாரம் மாறிப்போகும்
அப்பனே வஜ்ஜீரமாய் தேகமாகும்
இப்படியே நடக்கின்ற மார்கந்தன்னை
இயம்புகிறேன் உலகுதனில் மௌனமாய் நில். (64)

எட்டு இரண்டுக்கு பொருள்.

உறைத்ததால் புலத்தியனே உனக்குச் சொன்னேன்
உண்மையுடன் எட்டுரெண்டு மென்ற வார்த்தை
அறைகிறேன் தசதீக்ஷை யாகுமப்பா
அப்பனே இதை அறியார்க் கென்னவாய்க்கும்
உறைக்கிறேன் இந்தயெட்டுரெண்டுந் தன்னை
உத்தமனே நன்ருக அறிந்தாயானல்

அறைகிறேன் புலத்தியனே என்னைப் போலே
அந்தமாங் கோடியுகம் வாழலாமே. (65)

முப்பு முடித்தல்.

கவனிப்பு:—இந்த சந்தர்பத்தில் மிகவும் கவனமாக அறிவை செலுத்தி விஷயத்தை அறிந்துக்கொள்ளவேண்டும்

உறுதியுடன் இனிமுப்பு முடித்தல் சொல்வேன்
உத்தமனே மூன்றாண்டுங் கடந்த பின்பு
அருந்தவத்தால் வந்ததொரு மதி நாலுக்கு
அப்பனே ஒன்றுதான் காரஞ் சேரு. (66)

சேர்ந்துதான் கரைத்துமே மூன்று நாள்தான்
சென்றபின்பு தெளிவிருத்துபாச்சு அண்டச் சுண்ணம்
பார்த்துமே காய்ச்சியப்பா கொஞ்சஜலம் கொண்டிரக்கி
பகறுகிறேன் பீங்கானில் வழித்து வைத்து
நேர்த்தியாய் ஒருவாரம் ரவியில் வைத்தால்
நீருமற் காயுமடா காயக் காய
பார்த்துமே கத்திக்கொண்டு கீறி விட்டால்
பகறுகிறேன் கானலிலே பூத்துக்காயும் மண்டலத்தில் (67)

காய்ந்துமே முப்புவாம் இதற்குத் தானும்
கனிஉடனே பேர்மாத்திரம் சொல்லக் கேளு
ஆய்ந்துமே அட்டுப்பு என்று தானும்
அப்பனே ஒட்டுப்பு என்று தானும்

கூர்ந்துபார் கம்பிஉப்பு என்று தானும்
　　கூறுகிறேன் பாரைஉப்பு என்று தானும்
சேர்ந்துமே சித்தர்கள் கூடித்தானும்
　　வைத்துமே நாமங்கள் கொடுத்திட்டாரே. (68)

வைத்த அந்தஉப்பு சந்திரனொளிக்கு மேலாம்
　　அப்பனே ஆதியந்த உப்புக்கு
பத்தியுடன் சமன்வீரங் கூட்டித் தானும்
　　பகருகிறேன் அமுர்தத்தால் அரைத்துத் தானும்
புத்தியுடன் வில்லை தட்டி காயவைத்து
　　புகழாக அகலில் வைத்து மூடித்தானும்
சித்திபெற சீலைமண் செய்துலர்த்தி
　　செப்புகிறேன் புடம்போடச் சுன்னமாகும். (69)

சுன்னமா மிதுவல்லோ முப்புச் சுண்ணம்
　　சுகமான இச்சுன்னம் விட்டு தானும்
உன்னதமாய் முப்புவுந் தேடித் தேடி
　　உலகமதில் அலைந்தலைந்து இறந்தார் தானும்
உண்மையாய் கோடானு கோடியப்பா
　　உத்தமனே முப்பூவின் சுன்னத்தாலே
அண்டருட தயவினால் தொந்தங் கேளு
　　அப்பனே முப்பு இடை சூதஞ்சேரே. (70)

சேர்ந்துமே அமுதமது விட்டு ஆட்டி
சிறப்பாக வில்லை செய்துக் காய்ந்தபின்பு
பார்த்துமே அகலில் வைத்து மேலுமூடி
பகருகிறேன் சீலமண் செய்து தானும்
நேர்த்தியாய் முழப்புடத்தில் போடச் சுண்ணம்
நினைவாக சுன்னத்தில் கழஞ்சி தாக்கி
பூர்த்தியாய் பானத்தில் மத்தித்தப்பா
புகழாக துருசுக்குப் பூசிடாயே. (71)

துருசு சுன்னம்.

பூசியே அதற்குமேல் காரத்தாலே
புகலுகிறேன் கவசமது செய்து தானும்
ஆசித்து மூன்றுமண் சீலசெய்து
அப்பனே புடம்போட துருசுச் சுன்னம்
வாசித்த சுன்னத்தால் சரக்கெல்லாம் தான்
அப்பனே சுன்னமாம் சுன்னத்தாலே
வீசினல் தொந்தமது கோடிகோடி
விளம்புகிறேன் துறைகோடி தொந்தங்கோடிதானே (72)

ரசக்குளிகை செய்ய வாலைதிராவகம்.

பார்க்கவே குளிகை சொல்வேன் பின்னலப்பா
பாரினிலே திராவகத்தின் போக்கைக் கேளு

* நேர்த்தியாய் நவாசாரம் மேனிப் பூநீர்
நெடுங்கம்பி உப்போடு வெங்காரந் தான்
சீர்படிகம் பாறையுடன் உருவி பண்ணை
சிறப்பான பச்சைக் கர்ப்பூரத் தோடு
ஓர்பத்து உப்பதுவும் வகைக்கு தானும்
உத்தமனே சொல்லுகிறேன் பலந்தான் ஐந்தே (73)

அஞ்சாமல் சொல்லுகிறேன் அமுர்தந் தானும்
அப்பனே நாலு படியில் தானும்
அஞ்சாமல் காரத்தைச் சூரணந் தான்செய்து
அப்பனே படியதுவும் அதிலே கொட்டி
அஞ்சாமல் கரைத்துமே சொல்லக் கேளு
அப்பனே மூன்றுநாள் வைத்து தானும்
அஞ்சாமல் தெளிவிருத்து சாலில் வைத்து
அரிதாரம் வீரமுடன் கெவுரி வெள்ளை (74)

வெள்ளையுடன் பூரம் லிங்கம் சிலையினோடு
வெண்மை சிங்கி ரசகெந்தி துருசுபோடே

---

*கவனிப்பு :—நவாசாரம், குப்பைமேனி உப்பு, பூநீர், வெடிஉப்பு, வெங்காரம், படிகாரம் பாறைஉப்பு, நாயுருவிஉப்பு, பச்சை கர்ப்பூரம், பண்ணை உப்பு என பத்து உப்புகள்.

விள்ளுகிறேன் வகைக்குப் பலமெடுத்து ஒன்றாய்
விருப்பமுடன் சிலைதன்னில் கிளியா யப்பா
நல்லாய்கேள் பொட்டணமாய் கட்டித் தானும்
நவிலுகிறேன் முன்சாலில் தொங்க விட்டு
சள்ளையில்லா சாலுதன்னை அடுப்பில் வைத்து
சாற்றுகிறேன் கமலாக்கினியாய் வன்னிபோடே (75)

வன்னியிட்டு புகையதுவும் வாராமல் முன்
வருகின்ற நுரையகற்றி பொங்கா வண்ணம்
நன்னிதமாய் சரக்கதுவுங் கரையாமற் றுன்
நலமுடனே கணக்கு சென்று தீயைஆற்றி
உண்மையுடன் இறக்கியே கனல் மட்டிட்டால்
உருதியுடன் எடுத்துப்பார் சரக்கெல்லாந் தான்
வண்மையுடன் தான்கட்டி இருக்கும் பாரு
வகையுடனே அதுகளெல்லாம் பீங்கான் தன்னில் (76)

பீங்கானில் இட்டுமே ரவியில் வைத்து
பிலமாகக் காய்ந்த பின்பு சரக்குதன்னை
ஆங்கானும் சூரணமாய் செய்து தானும்
அப்பனே முன்பத்து உப்பு தன்னை
சாங்கமாய் சூரணித்துச் சொல்லக் கேளு
சாற்றுகிறேன் இருவகையுந் தொந்தம் பண்ணி

பாங்குபெற வாலைகுடந் தன்னி லிட்டு
பகருகிறேன் செம்பில் செய்த வாலையாமே (77)

செய்ததொரு வாலைகுடம் மேலேமூடி
செப்புகிறேன் உளுந்துமா கொண்டுவந்து
உய்தமுடன் வெண்கருவா லரைத்து தானும்
உத்தமனே சிலைதனில் தடவி நீயும்
அய்யனே புலத்தியனே கவசஞ் செய்து
அன்புடனே வாலுகையை அடுப்பி லேத்தி
ஓய்யாரமாகவே வன்னி மூட்டி
உருதியுடன் எரித்திடுவாய் உலைந்து கேளே (78)

உலைந்துமே வாலையதின் வாயில் வைத்து
உத்தமனே குப்பிதனை பாய்ச்சி வைத்தால்
ஜெகமகிழ திராவகந்தான் இறங்கும் பாரு
செப்புகிறேன் ரத்தவர்ணம் போலிருக்கும்
அகமகிழ கமலாக்கி யினாலெரிக்க
அப்பனே தசநாழி சுருக்கு எத்து
புகலுகிறேன் சூதமதுக் கட்டிப்போகும்
புகழான காரத்தில் சாரம்விட்டே (79)

விட்டரைத்துச் சூதமணித் தனக்குத்தானும்
விருப்பமுடன் கவசமது செய்துவப்பா